©
GOVERNMENT OF TAMIL NADU
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 19.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 22A] சென்னை, வெள்ளிக்கிழமை, ஜனவரி 7, 2022
மார்கழி 23, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு-2052

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

பொருளடக்கம்

**சட்டமுன்வடிவுகள்:** *பக்கங்கள்.*

எண். 8/2022—**சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) சட்டம்.** .. .. .. .. 3-14

எண். 9/2022—**தமிழ்நாடு மாநகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம்** .. .. 15-20

எண். 10/2022— **தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம்** .. .. 21-22

எண். 11/2022—**தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டாம் (திருத்தச்) சட்டம்** .. .. 23-32

எண். 12/2022—**தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம்** 33-36

எண். 13/2022—**தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம்** .. .. 37-38

எண். 14/2022—**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம்** .. 39-42

எண். 15/2022—**தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டம்** .. .. .. 43-48

**2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 8/2022**

**1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகள் ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, 2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,– பொருள் வரையறைகள்.

(1) ''ஆவடி மாநகராட்சி'' என்பது I ஆம் இணைப்புப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள காவல் நிலையங்களின் வரம்புகளை உள்ளடக்கிய உள்ளாட்சி பரப்பிடம் என்று பொருள்படும் ;

(2) ''தாம்பரம் மாநகராட்சி'' என்பது II ஆம் இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள காவல் நிலையங்களின் வரம்புகளை உள்ளடக்கிய உள்ளாட்சி பரப்பிடம் என்று பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் III/1888. (3) மாநகரக் காவல் சட்டம் என்பது 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டம் என்று பொருள்படும்;

(4) ''இந்தச் சட்டத்தின் வெளியிடப்பட்ட தேதி'' என்பது ***தமிழ்நாடு அரசிதழில்*** 2022 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்புச் செய்தல்) சட்டம் வெளியிடப்பட்ட தேதி என்று பொருள்படும்;

(5) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(6) ''நடைமுறையிலுள்ள சட்டம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது அதன் பகுதி எதிலுமோ நடைமுறையில் உள்ள இயற்றுச் சட்டம், சட்டம், ஒழுங்குமுறை விதி, ஆணை, துணை விதி, விதி, திட்டம் அல்லது அறிவிக்கை எதனையும், அல்லது தமிழ்நாடு மாநிலம் முழுவதிலுமோ அல்லது அதன்பகுதி எதிலுமோ சட்டத்தின் செயல்திறனைப் பெற்றிருக்கின்ற முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்;

(7) ''இணைப்புப் பட்டியல்'' என்பது இந்தச் சட்டத்துடன் இணைக்கப்பட்ட இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்;

(8) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்.

தமிழ்நாடு சட்டம் III/1981–ன் நீட்டிப்பு. 3.(1) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும், இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதிக்கு முன்பு நடைமுறையில் இருந்தவாறான மாநகரக் காவல் சட்டமானது ஆவடி மாநகரத்திலும், தாம்பரம் மாநகரத்திலும் நீட்டிக்கப்படுதல் வேண்டும், மற்றும் நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

(2) ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தில்,—

(a) சென்னை மாநகரத்தைக் குறிப்பிடும் (3 ஆம் பிரிவில் உள்ள சுட்டுகை அல்லாத பிற) சுட்டுகை எதுவும், இந்தச் சட்டத்தின் காரணமாக ஆவடி மாநகரத்தைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகவோ அல்லது தாம்பரம் மாநகரத்தைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகவோ பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

(b) சென்னை காவல் துறை ஆணையரைக் குறிப்பிடும் சுட்டுகை எதுவும் இந்தச் சட்டத்தின் காரணமாக, ஆவடி காவல்துறை ஆணையரைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகவோ அல்லது, நேர்விற்கேற்ப தாம்பரம் மாநகரக் காவல்துறை ஆணையரைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகவோ பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கீழ் மாவட்ட குற்றவியல் நடுவர்கள் மற்றும் நிருவாகத் துறை நடுவர்களின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கு ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களிலுள்ள காவல் துறை ஆணையருக்கும் மற்றும் குறித்த சில பிற காவல் அலுவலர்களுக்கும் அதிகார மளிப்பதற்கான அரசின் அதிகாரம்.

4. (1) மாநகரக் காவல் சட்டத்தின் 7 ஆம் பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்கு ஊறின்றி, அரசானது, அறிவிக்கை வாயிலாக மற்றும் அதில் குறித்துரைக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும், வரம்புகளுக்கும் உட்பட்டு,—

(a) (இதன்பின்பு, இந்தப் பிரிவில் கூறப்பட்ட தொகுப்புச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் அல்லது மாநில சட்டமன்றம் மாநிலத்திற்காக சட்டமியற்றும் அதிகாரம் பெற்றுள்ள பொருட்பாடுகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனின் அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகைமுறைகளின்படி நிருவாகத் துறை நடுவர் ஒருவரின் மற்றும் மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும், கடமைகளையும் ஆவடி மாநகரம் அல்லது தாம்பரம் மாநகரம் தொடர்பாக செலுத்தவும், புரியவும் நேர்விற்கேற்ப ஆவடி காவல் துறை ஆணையருக்கோ அல்லது தாம்பரம் காவல்துறை ஆணையருக்கோ அதிகாரமளிக்கலாம்.

(b) கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் அல்லது மாநிலச் சட்டமன்றமானது மாநிலத்திற்காக சட்டமியற்று அதிகாரம் பெற்றிருக்கின்ற பொருட்பாடுகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதனின் அறிவிக்கையில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய வகைமுறைகளின்படி நிருவாகத் துறை நடுவர் ஒருவரின் அதிகாரங்களையும், கடமைகளையும் ஆவடி மாநகரம் அல்லது தாம்பரம் மாநகரம் தொடர்பாக செலுத்தவும் புரியவும் (காவல்துறை உதவி ஆணையரின் படிநிலைக்குக் குறையாத ஓர் அலுவலரான) நேர்விற்கேற்ப ஆவடி மாநகரத்தில் அல்லது தாம்பரம் மாநகரத்தில் உள்ள காவல்துறை ஆணையருக்கு கீழ் உள்ள அலுவலர் எவருக்கும் அதிகாரம் அளிக்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி அவர் அதிகாரங்களைச் செலுத்தவோ அல்லது கடமைகளைப் புரியவோ அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் எவற்றையும் செலுத்தி வருகையில் மற்றும் கடமைகளில் எதனையும் புரிந்து வருகையில் கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள நிருவாகத்துறை நடுவரொருவர், அந்தப் பிரிவின்படி நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட குற்றவியல் நடுவரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவராக இருப்பதைப்போன்று அதே அளவிற்கு, நேர்விற்கேற்ப, ஆவடி மாநகரத்தில் அல்லது தாம்பரம் மாநகரத்தில் உள்ள காவல்துறை ஆணையருக்குக் கீழுள்ள அலுவலர் ஒவ்வொருவரும் முறையே அந்தந்தக் காவல்துறை ஆணையரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(3) ஆவடி மாநகரத்தின் காவல்துறை ஆணையர் அல்லது தாம்பரம் மாநகரத்தின் காவல்துறை ஆணையர் அல்லது அத்தகைய ஆணையருக்குக் கீழுள்ள அலுவலர் எவரும், (1) ஆம் உட்பிரிவின்படி அவர் செலுத்துவதற்கு அல்லது புரிவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் கடமைகள் எவற்றையும் செலுத்துகையிலும், புரிகையிலும் கூறப்பட்ட தொகுப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட மாவட்ட குற்றவியல் நடுவரின் பொதுவான கட்டுப்பாட்டிற்கு உள்ளாகுதல் கூடாது.

ஆவடி, தாம்பரம் ஆகிய மாநகரங்களில் இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட தேதிக்கு முன்னர் செயல்பட்டு வந்த காவற் படையாகவே நீட்டிக்கப்பட்ட மாநகரக் காவல் சட்டத்தின்படி அமைக்கப் பட்டுள்ள காவற் படையாகவே கொள்ளப்படும்.

5. (1) ஆவடி மாநகரத்திலும், தாம்பரம் மாநகரத்திலும், (இதன் பின்பு இந்தப்பிரிவில் இருந்துவந்த காவற்படை, எனக் குறிப்பிடப்படுவதான) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு செயல்பட்டு வந்த காவற்படையானது நீட்டிக்கப்பட்டதான மாநகரக் காவல் சட்டத்தின்படி இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளில், நேர்விற்கேற்ப ஆவடி மாநகரத்திற்காக, தாம்பரம் மாநகரத்திற்காக அமைக்கப்பட்டுள்ள காவற்படையாகக் கொள்ளப்படும். இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு பதவியில் இருந்து வந்த காவற்படையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், நேர்விற்கேற்ப ஆவடி மாநகரம் அல்லது தாம்பரம் மாநகரத்திற்கான காவற்படையின் உறுப்பினராக அவ்வாறு வெளியிடப்பட்டட தேதியில் நியமிக்கப்படுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு இருந்து வந்த காவற்படையின் காவல் அலுவலர் எவரின் முன்பாக முடிவுறாதிருந்த (புலனாய்வுகள் வாயிலான நடவடிக்கைகள் உள்ளடங்கலான) நடவடிக்கைகள் அனைத்தும் இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு (1) ஆம் உட்பிரிவின்படி அவர் நியமனம் செய்யப்படுவதாகக் கொள்ளப்படுகின்ற அந்த பதவியை வகிப்பவர் என்ற தகுதியில், அவர் முன்பு நடப்பிலுள்ள நடவடிக்கைகளாகக் கொள்ளப்பட்டு அவ்வாறே அவை மேற்கொண்டு நடத்தப்படுதலும் வேண்டும்.

(3) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவரால் அல்லது நிருவாகத்துறை நடுவர் ஒருவரால் சட்டம் எதன்படியும் செலுத்தப்படக்கூடியதான, ஆற்றப்படக்கூடியதான அதிகாரம் அல்லது பணி எதுவும் ஆவடி காவல் துறை ஆணையர் அல்லது தாம்பரம் காவல் துறை ஆணையர் அல்லது நீட்டிக்கப்பட்ட மாநகரக் காவல் சட்டத்தினால் அல்லது அதன்படியான அமர்த்தப்பட்ட காவல்துறையின் பிற அலுவலர் எவருக்கும் அளிக்கப்பட்டிருக்குமிடத்து அவ்வாறு அளிக்கப்படுவதற்கு முன்பு, நேர்விற்கேற்ப மாவட்ட குற்றவியல் நடுவர் அல்லது, நிருவாகத் துறை நடுவரின் முன்னர் நிலுவையிலிருந்த அத்தகைய அதிகாரத்தை செலுத்துவது அல்லது அத்தகைய பணியை ஆற்றுவது தொடர்பான அல்லது அதிலிருந்து எழுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும், ஆவடி காவல்துறை ஆணையரின் பிற அலுவலருக்கு அத்தகைய அதிகாரம் அல்லது பணியானது அளிக்கப்பட்டதன் பேரில், நேர்விற்கேற்ப ஆவடி காவல்துறை ஆணையர் அல்லது தாம்பரம் காவல் துறை ஆணையர் அல்லது காவல்துறையின் பிற அலுவலருக்கு மாற்றப்பட்டதாயிருக்கும்; மற்றும் அவ்வாறு நடவடிக்கைகள் மாற்றப்பட்டுள்ள அந்த அலுவலர் அவற்றைப் புதிதாகவோ அல்லது மாற்றம் செய்யப்பட்டுள்ள அத்தகைய நிலையிலிருந்தோ மேற்கொள்ளுதல் வேண்டும்.

ஆவடி, தாம்பரம் ஆகிய மாநகர ஆணையர்களின் மீது காவல் துறை இயக்குநரின் கட்டுப்பாடு.

6. (1) ஆவடி காவல்துறை ஆணையரும், தாம்பரம் காவல்துறை ஆணையரும் அந்நகரங்களுக்கு செயற்பாடு நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின் கீழ் தங்கள் பணிகளை செய்து வருகையில், (2) ஆம் உட்பிரிவின்படி செய்யப்படக்கூடிய விதிகள் எவற்றுக்கும் உட்பட்டு தமிழ்நாடு மாநிலத்திற்கான காவல்துறை தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழும் செயலாட்சியின் கீழும் இருந்து வருவார்கள்.

(2) ஆவடி காவல்துறை ஆணையர், தாம்பரம் காவல்துறை ஆணையர் ஆகியோர் தொடர்பாக (1) ஆம் உட்பிரிவினால் காவல்துறை இயக்குநருக்கு அளிக்கப்பட்ட கட்டுப்பாட்டு மற்றும் செயலாட்சி அதிகாரங்களை செலுத்தி வருவதை வரையறுப்பதற்கும் முறைப்படுத்துவதற்குமான விதிகளை செய்வதற்கு அரசானது தகுதி வாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

(3) மாவட்ட குற்றவியல் நடுவர் ஒருவர் அல்லது நிருவாகத் துறை நடுவரொருவர் சட்டம் எதன்படியும் நேர்விற்கேற்ப, ஆவடி காவல்துறை ஆணையரால் அல்லது தாம்பரம் காவல்துறை ஆணையரால் செலுத்தப்படக்கூடிய அதிகாரங்கள் அல்லது ஆற்றப்படக்கூடிய பணிகள் தொடர்பாக இந்தப் பிரிவில் உள்ள எதுவும் பொருந்துதலாகாது.

ஆவடி, தாம்பரம் ஆகிய மாநகரங்களில் நடைமுறையில் இல்லாத சட்டங்களைக் குறிப்பிடும் சுட்டுகைகளுக்கு பொருள் கொள்ளுதல்.

7. (1) இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளன்று, ஆவடி அல்லது தாம்பரம் மாநகரங்களில் நடைமுறையில் இல்லாத சட்டம் ஒன்று குறித்து, இந்தச் சட்டத்தினால் அந்நகரங்கள் தொடர்பாக நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்திலுள்ள சுட்டுகை எதுவும் மேற்சொன்ன மாநகரங்களின் நடைமுறையிலுள்ள நேரிணையான வேறு சட்டம் ஏதேனும் இருப்பின் அதனை சுட்டுவதாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் XXIV/1859.

(2) ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களில் நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும், 1859 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டத்தை குறிப்பிடும் சுட்டுகை எதுவும் அந்த மாநகரங்கள் தொடர்பாக இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளன்று அல்லது அதன்பின்பு மாநகரக் காவல் சட்டத்தை குறிப்பிடும் ஒரு சுட்டுகையாகப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

நேரிணையான சட்டத்தை நீக்கறவு செய்தல்.

மையச் சட்டம் XXIV/1859.

8. இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முன்பு (இதன் பின்பு இந்தப் பிரிவில் மையச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1859 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட காவல் சட்டம், மையச் சட்டத்திற்கான இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மற்றும் மையச் சட்டத்தின் 54 – A ஆம் பிரிவின்படியான அறிவிக்கையின் மூலமாக நீட்டிக்கப்பட்டதுமான மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகள் உள்ளடங்கலாக மாநகரக் காவல் சட்டத்திற்கு நேரிணையான சட்டம் எதுவும் ஆவடி, தாம்பரம் மாநகரங்களில் இருக்குமானால், மாநிலத்திற்கான சட்டங்களைச் செய்வதற்கான அதிகாரத்தை மாநிலச் சட்டமன்றம் பெற்றுள்ள, அந்த விஷயங்கள் தொடர்பாக அந்த நேரிணையான சட்டம் இருக்கின்ற அளவுக்கு, நேர்விற்கேற்ப, ஆவடி அல்லது தாம்பரம் மாநகரங்கள் தொடர்பாக அத்தகைய நேரிணையான சட்டமானது இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளில் நீக்கப்படும்.

காப்புரைகள்.

9. (1) நேரிணையான சட்டம் எதையும் 8 ஆம் பிரிவினால் நீக்கம் செய்வதானது; –

(a) அத்தகைய சட்டம் ஏதொன்றின் முந்திய செயற்பாட்டையோ அல்லது அதன்படிச் செய்யப்பட்ட அல்லது உரியவாறு உட்படுத்தப்பட்ட செயல் எதனையும்; அல்லது

(b) அத்தகைய சட்டம் எதன்படியும் ஈட்டப்பட்டுள்ள, சேர்ந்துள்ள அல்லது அதற்கு உள்ளான உரிமை, சிறப்புரிமை கடமைப் பொறுப்பு அல்லது கடப்பாடு எதையும்; அல்லது

(c) அத்தகைய சட்டம் எதற்கும் எதிராக புரியப்பட்ட குற்றம் ஏதொன்றையும் பொறுத்து அடைந்த தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதையும்; அல்லது

(d) மேற்சொல்லப்பட்டபடியான அத்தகைய உரிமை, சிறப்புரிமை, கடமைப் பொறுப்பு, கடப்பாடு, தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை ஏதொன்றினையும் பொறுத்த புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி எதையும் பாதித்தல் ஆகாது;

மற்றும் மாநகரக் காவல் சட்டத்தின் செயற்பாடு நீட்டிக்கப்பட்டிராதது போன்றே அத்தகைய புலனாய்வு சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி தொடரப்படலாம், தொடுக்கப்படலாம், செயற்படுத்தப்படலாம் என்பதோடு அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை விதிக்கப்படலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, ஆவடி அல்லது தாம்பரம் மாநகரங்கள் தொடர்பாக அத்தகைய நேரிணையான சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட நியமனம் அல்லது ஒப்படைவு, பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை, ஆணை, அறிவுறுத்தம் அல்லது பணிப்பாணை, உருவாக்கப்பட்ட விதி, ஒழுங்குமுறை விதி, படிவம், துணை விதி அல்லது செயல் திட்டம் அல்லது வழங்கப்பட்ட சான்றிதழ், அனுமதி அல்லது உரிமம் அல்லது செய்துகொள்ளப்பட்ட பதிவு எதுவும் உள்ளடங்கலாக செய்யப்பட்ட செயல் எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், மாநகரக் காவல் சட்டத்தின் நேரிணையான வகைமுறைகளின் கீழ் செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்; நீட்டிக்கப்பட்டதான மேற்சொன்ன மாநகரக் காவல் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் மாற்றமைத்தாலன்றி மற்றும் அதுவரையிலும் அதன்படியே தொடர்ந்து நடைமுறையில் இருந்துவருதலும் வேண்டும்.

புதிய அதிகார அமைப்புகள் அமைத்து உருவாக்கப்பட்டிருக்கின்றவிடத்து அதிகார அமைப்புகளை குறிப்பிடும் சுட்டுகைக்குப் பொருள் கொள்ளுதல்.

**10.** நேர்விற்கேற்ப, ஆவடி, தாம்பரம் மாநகரங்களில் அதிகாரங்கள் எவற்றையும் செலுத்தி வருவதற்கு அல்லது பணிகள் எவற்றையும் ஆற்றிவருவதற்கு, இந்தச் சட்டம் வெளியிடப்பட்ட நாளுக்கு முந்திய தேதியன்று தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு என்று நடைமுறையிலுள்ள சட்டம் எதிலும் வடிவம் மற்றும் சொற்கள் மூலமாகவுமோ குறிப்பிடப்படும் சுட்டுகை எதுவும், நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின்படியாகவோ மேற்சொன்ன மாநகரங்களுக்கு நேரிணையான புதிய அதிகார அமைப்பொன்று அமைத்து உருவாக்கப்பட்டிருக்கின்றவிடத்து, அது அந்தப் புதிய அதிகார அமைப்பைக் குறிப்பிடும் ஒரு சுட்டுகையாக இருந்தாற்போன்று செயற்பாட்டில் இருத்தல் வேண்டும்.

மாநகரக் காவல் சட்டத்தைப் பொருந்தச் செய்வதற்கு உதவுகின்ற நோக்கங்களுக்காக நீதி மன்றங்கள் மற்றும் பிற அதிகார அமைப்புகளின் அதிகாரங்கள்.

**11.** ஆவடி மாநகரத்தில், தாம்பரம் மாநகரத்தில் நீட்டிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தை பொருந்தச் செய்வதற்கு உதவுகின்ற நோக்கங்களுக்காக, நீதிமன்றம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதுவும் அந்த நீதிமன்றத்தின் அல்லது அதிகார அமைப்பின் முன்பு உள்ள பொருட்பாடு எதற்கும் ஏற்றபடி அதன் சாராம்சத்தை பாதிக்காமல் மேற்சொன்ன சட்டத்தை பொருந்தச் செய்வதற்கு முறையானதாகவோ இருக்கக்கூடிய மாறுதல்களுடன் தேவையானதாகவோ அதற்குப் பொருள் கொள்ளலாம்.

இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**12.** இந்தச் சட்டத்தினால் ஆவடி, தாம்பரம் மாநகரங்களுக்கு நீடிக்கப்பட்டவாறான மாநகரக் காவல் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு சமயத்திற்கேற்றார் போல் ஆணையின் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்கும் நோக்கத்திற்காக தேவையென அதற்குத் தோன்றக் கூடிய எதனையும் செய்யலாம்.

*வரம்புரையாக*, இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டாண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

இணைப்புப் பட்டியல்களை திருத்தம் செய்வதற்கான அதிகாரம்.

**13.** அரசானது, அறிவிக்கை வாயிலாக காவல் நிலையம் எதனையும் சேர்ப்பதற்கோ அல்லது நீக்குவதற்கோ இணைப்புப் பட்டியல்களை திருத்தம் செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**14.** (1) அரசு இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றில் எதையும் நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்படும் விதிகள் அல்லது பிறப்பிக்கப்படும் அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் குறிப்பிட்டதொரு நாளன்று அவை நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாக சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடர் அல்லது அதனை அடுத்து வரும் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்பு சட்டமன்றப் பேரவை அந்த விதி, ஆணை அல்லது அறிவிக்கையில் மாறுதல் எதையும் செய்வதற்கு உடன்படுமானால், அல்லது அந்த விதி அல்லது ஆணை பிறப்பிக்கப்படுதலோ அந்த அறிவிக்கை வெளியிடப்படுதலோ ஆகாது என்று உடன்படுமானால், அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும்; அல்லது, நேர்விற்கேற்ப, நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அவ்வாறு மாறுதல் செய்வது அல்லது நடைமுறைக்கு வராமற்போனது எதுவும், அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையின் கீழ் முன்னமே செய்யப்பட்டுள்ள செயல் ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் பாதகமின்றி இருத்தல் வேண்டும்.

நீக்கறவு மற்றும் காப்புரை.

**15.** (1) 2021 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2022.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும், கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக, அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

**இணைப்புப் பட்டியல் – I**

**ஆவடி மாநகரம்**

**[2 (1) ஆம் பிரிவைக் காண்க]**

| *வ. எண்.* | *காவல் நிலையங்கள்.* |
|---|---|
| 1. | அம்பத்தூர் |
| 2. | அம்பத்தூர் தொழிற்பேட்டை |
| 3. | ஆவடி |
| 4. | எண்ணூர் |
| 5. | காட்டூர் |
| 6. | கொரட்டூர் |
| 7. | மணலி |
| 8. | மணலி புதுநகர் |
| 9. | மாங்காடு |
| 10. | மீஞ்சூர் |
| 11. | மாதாவரம் பால்பண்ணை |
| 12. | முத்தாபுதுப்பேட்டை |
| 13. | நசரத்பேட்டை |
| 14. | பட்டாபிராம் |
| 15. | பூந்தமல்லி |
| 16. | செங்குன்றம் |
| 17. | சாத்தாங்காடு |
| 18. | செவ்வாப்பேட்டை |
| 19. | சோழவரம் |
| 20. | எஸ்.ஆர்.எம்.சி |
| 21. | டேங்க் பேக்டரி |
| 22. | திருமுல்லைவாயில் |
| 23. | திருநின்றவூர் |
| 24. | திருவேற்காடு |
| 25. | வெள்ளவேடு |

**இணைப்புப் பட்டியல் – II**

**தாம்பரம் மாநகரம்**

**[2 (2) ஆம் பிரிவைக் காண்க]**

| ***வ. எண்.*** | ***காவல் நிலையங்கள்.*** |
|---|---|
| 1. | குரோம்பேட்டை |
| 2. | சிட்லபாக்கம் |
| 3. | கூடுவாஞ்சேரி |
| 4. | கண்ணகி நகர் |
| 5. | கானாத்தூர் |
| 6. | கேளம்பாக்கம் |
| 7. | குன்றத்தூர் |
| 8. | மறைமலைநகர் |
| 9. | மணிமங்கலம் |
| 10. | ஓட்டேரி |
| 11. | பல்லாவரம் |
| 12. | பள்ளிக்கரணை |
| 13. | பீர்க்கன்கரணை |
| 14. | பெரும்பாக்கம் |
| 15. | சேலையூர் |
| 16. | செம்மஞ்சேரி |
| 17. | சங்கர் நகர் |
| 18. | சோமங்கலம் |
| 19. | தாம்பரம் |
| 20. | தாழம்பூர் |

**நோக்கக் காரண விளக்கவுரை.**

2021–2022 ஆம் ஆண்டிற்கான காவல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 22–ஐ நிறைவேற்றுகையில் சிறந்த நிர்வாகத்திற்காகவும், காவல் துறையின் தரத்தை மேம்படுத்தவும், சென்னை மாநகரக் காவல் ஆணையரகமானது மூன்றாகப் பிரிக்கப்படும் மற்றும் அண்டை மாவட்டங்களில் இருந்து குறித்த சில காவல் நிலையங்களை உள்ளடக்கி ஆவடி மற்றும் தாம்பரத்தில் புதிய ஆணையரகங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார். மேற்சொன்ன அறிவிப்பை நடைமுறைப்படுத்தும் வகையில், தற்போதுள்ள சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்தை மூன்றாக பிரித்து 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III/1888) வகைமுறைகளை அப்பகுதிகளுக்கு நீட்டித்து, ஆவடி மற்றும் தாம்பரத்தில் புதிய ஆணையரகங்களை உருவாக்குவதற்கு சட்டம் ஒன்றை இயற்ற அரசானது முடிவு செய்துள்ளது.

2. மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, 2021 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசர சட்டம் 1/2022), 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டு, அது 2022 ஜனவரி திங்கள் 1 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது கூறப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றியமைக்க விழைகிறது.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

**2021 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2022) பிறப்பிக்கப்பட்டதைத் தேவையானதாக்கிய சூழ்நிலைகளை விளக்குகின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 168 ஆம் விதியின்படியான விவர அறிக்கை.**

2021–2022 ஆம் ஆண்டிற்கான காவல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 22–ஐ நிறைவேற்றுகையில் சிறந்த நிர்வாகத்திற்காகவும், காவல் துறையின் தரத்தை மேம்படுத்தவும், சென்னை மாநகரக் காவல் ஆணையரகமானது மூன்றாகப் பிரிக்கப்படும் மற்றும் அண்டை மாவட்டங்களில் இருந்து குறித்த சில காவல் நிலையங்களை உள்ளடக்கி ஆவடி மற்றும் தாம்பரத்தில் புதிய ஆணையரகங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார். மேற்சொன்ன அறிவிப்பை நடைமுறைப்படுத்தும் வகையில், தற்போதுள்ள சென்னை மாநகரக் காவல் ஆணையரகத்தை மூன்றாக பிரித்து 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் III/1888) வகைமுறைகளை அப்பகுதிகளுக்கு நீட்டித்து, ஆவடி மற்றும் தாம்பரத்தில் புதிய ஆணையரகங்களை உருவாக்குவதற்கு சட்டம் ஒன்றை இயற்ற அரசானது முடிவு செய்துள்ளது.

2. மாநிலச் சட்டமன்றப் பேரவையானது, அந்த நேரத்தில் அமர்வில் இல்லாமல் இருந்ததால் மேற்கண்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பிப்பது தேவையானதாக இருந்தது. அதற்கிணங்கிய வகையில், 2021 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (ஆவடி மற்றும் தாம்பரம் மாநகரங்களுக்கு நீட்டிப்பு செய்தல்) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2022), 2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாளன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் பிறப்பிக்கப்பட்டு, அது 2022 ஜனவரி திங்கள் 1 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இச்சட்டமுன்வடிவானது சட்டமாக இயற்றப்படும் போது மற்றும் நடைமுறைக்கு கொண்டு வரப்படும்போது மாநிலத் தொகுநிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். முன்மொழியப்பட்ட சட்டத்தின் விளைவாக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஏற்படக்கூடிய செலவினத்தை மிகத் துல்லியமாக எந்த நிலையிலும் மதிப்பிட இயலாது.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இச்சட்டமுன்வடிவின் 4 (1), 6(2), 12, 13 மற்றும் 14 ஆகிய கூறுகளானவை முன்மொழியப்பட்ட சட்டத்தின் கீழ் விதிகளை செய்வதற்கோ அல்லது ஆணைகள் அல்லது அறிவிக்கைகளை பிறப்பிப்பதற்கோ அரசுக்கு அதிகாரம் அளிக்கின்றன.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**மு.க. ஸ்டாலின்,**
*முதலமைச்சர்,*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஜனவரி 7.

**கி. சீனிவாசன்**,
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 9/2022**

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**பகுதி I.**

**முன்னுரை.**

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 20 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பகுதி II**

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919.

2. 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 414-B ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும். 414–B ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**பகுதி III.**

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

3. 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 375–B ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும். 375–B ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**பகுதி IV.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

4. 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின், பிரிவு 510-AAA ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும். 510–AAA ஆம் பிரிவுக்கான திருத்தம்.

## பகுதி V.

### 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

511–AAA ஆம் பிரிவுக்கான திருத்தம்.

5. 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின், 511–AAA ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 25/1981.

## பகுதி VI.

### 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

10–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

6. 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின், 10–A ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1994.

## பகுதி VII.

### 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

10–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

7. 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின், 10–A ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 28/1994.

## பகுதி VIII.

### 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

10–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

8. 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் 10–A ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 29/1994.

## பகுதி IX.

### 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

9. 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 7/2008.

## பகுதி X.

### 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

10. 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 8/2008.

பகுதி XI.

**2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 26/2008.

**11.** 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

பகுதி XII.

**2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 27/2008.

12. 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

பகுதி XIII.

**2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 24/2013.

13. 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

பகுதி XIV.

**2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 25/2013.

**14.** 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

9–A ஆம் பிரிவுக்கான திருத்தம்.

பகுதி XV.

**2019 ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 10/2019.

15. 2019 ஆம் ஆண்டு ஓசூர் மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், 4 ஆம் உட்பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

10 ஆம் பிரிவுக்கான திருத்தம்.

பகுதி XVI.

**2019 ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்**

தமிழ்நாடு சட்டம் 11/2019.

**16.** 2019 ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், 4 ஆம் உட்பிரிவில், “2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்காக, “2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாகமைக்கப்படுதல் வேண்டும்.

10 ஆம் பிரிவுக்கான திருத்தம்.

## பகுதி XVII.

10 ஆம் பிரிவுக்கான திருத்தம்.

**2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 24/2019.

17. 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவில், 4 ஆம் உட்பிரிவில், "2021 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றடருக்காக, "2022 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

நீக்கறவு மற்றும் காப்புரை.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2021.

18. (1) 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டமானது இதன்மூலம் நீக்கறவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் V/1920.
தமிழ்நாடு சட்டம் 15/1971.
தமிழ்நாடு சட்டம் 25/1981.
தமிழ்நாடு சட்டம் 27/1994.
தமிழ்நாடு சட்டம் 28/1994.
தமிழ்நாடு சட்டம் 29/1994.
தமிழ்நாடு சட்டம் 7/2008.
தமிழ்நாடு சட்டம் 8/2008.
தமிழ்நாடு சட்டம் 26/2008.
தமிழ்நாடு சட்டம் 27/2008.
தமிழ்நாடு சட்டம் 24/2013.
தமிழ்நாடு சட்டம் 25/2013.
தமிழ்நாடு சட்டம் 10/2019.
தமிழ்நாடு சட்டம் 11/2019.
தமிழ்நாடு சட்டம் 24/2019.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்டிருந்த போதிலும், 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம், 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டம், 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டம், 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டம், 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டம், 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டம், 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டம், 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டம், 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டம், 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டம், 2019 ஆம் ஆண்டு ஒசூர் மாநகராட்சிச் சட்டம், 2019 ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டம் மற்றும் 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தும் மற்றும் அவற்றின் அவசரச் சட்டங்களினால் ஏற்பட்ட திருத்தங்கள் யாவும் இந்த அவசரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

நீதிப்பேராணை மனு எண் 33984/2016–ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 2016 அக்டோபர் திங்கள் 4 ஆம் தேதியிட்ட ஆணைக்கிணங்க பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தனி அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் கூறப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலமானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, இறுதியாக 2021 டிசம்பர் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

2. 2019 டிசம்பர் 11–ஆம் தேதியிட்ட நீதிப் பேராணை (உரிமையியல்) எண்.1443/2019–உடன் படிக்கப்பட்ட, 2019 டிசம்பர் 6 ஆம் தேதியிட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்கள் 5467–5469/2017–இன் இடைக்கால மனு எண் 182868/2019–ல் மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்துரர், இராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய புதிதாக மறுசீரமைக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிற்றொகுதிகளின் எல்லை மறுவரையறையானது, 2021 நவம்பர் 1,2 மற்றும் 3–ஆம் தேதிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லை வரையறை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், கூறப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களைச் சார்ந்த மகளிர் மற்றும் மகளிர் (பொது) ஆகியோரைச் சார்ந்த நபர்களுக்கான, இட ஒதுக்கீடானது, 2021 டிசம்பர் 7, 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலும், சட்டமன்றப் பேரவையில், 2021–2022 ஆம் ஆண்டிற்கான, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையில், ஆறு நகராட்சிகள், அதாவது, கடலூர், காஞ்சிபுரம், சிவகாசி, கரூர், தாம்பரம் மற்றும் கும்பகோணம் ஆகிய நகராட்சிகள் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது மற்றும் 28 பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டன. மேற்சொன்ன புதிதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான, சிற்றொகுதிகளின் எல்லை மறுவரையறை மற்றும் இட ஒதுக்கீடு செயல்முறைகளானவை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் பின்பு, கூறப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகளுக்கான இட ஒதுக்கீடானது அறிவிக்கப்பட வேண்டியுள்ளது.

4. மேலும், மாண்பமை இந்திய உச்சநீதிமன்றமானது, நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண் 1443/2019–ல், பல்வகை மேல்முறையீடு எண் 1404/2021–ல் மற்றும் பல்வகை மேல்முறையீடு எண். 2120/2021–ல் 27.09.2021 தேதியிட்ட அதன் ஆணையில் மாநிலத்தில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களை நடத்த அதன் ஆணையின் தேதியில் இருந்து நான்கு மாத காலம் அவகாசம் வழங்கியது.

5. மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தின் கூறப்பட்ட ஆணைக்கிணங்கி, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையமானது, 17 மாநகராட்சிகள், 110 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளுக்கான சாதாரண தேர்தல் நடத்தும் நடைமுறைகளுக்கான விரைவான நடவடிக்கையை தொடங்கியது. தற்போதைய சட்டமன்றப் பேரவையின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தொகுதிவாரியான உள்ளாட்சி அமைப்பின் வாக்காளர் பட்டியல்களை தயாரித்தல், வாக்குச் சாவடிகளை அடையாளம் காணுதல், அனைத்து தொடர்புடைய அலுவலர்களுக்கு மின்னணு வாக்கு இயந்திரங்களைக் கையாளுவதற்கான பயிற்சியளித்தல், மின்னணு வாக்கு இயந்திரங்களின் முதல் நிலை பரிசோதனை செய்தல் போன்ற தேர்தலுக்கு முந்தைய நடவடிக்கைகள் கூறப்பட்ட ஆணையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. மேற்கண்ட சூழ்நிலைகளில், தனி அலுவலர்களின் பதவிக் காலமானது 2021 டிசம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைவதன் காரணமாக, தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 2022 ஜூன் 30 வரையிலான மேலும் ஆறு மாத காலத்திற்கு அல்லது பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கான சாதாரண தேர்தல்களுக்கு பின்பு நடத்தப்படும் மன்றத்தின் முதல் கூட்டம் வரை, இதில் எது முந்தையதோ அது வரையில் நீட்டிப்பதற்காக பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்ய அரசானது முடிவு செய்தது.

7. மாநிலச் சட்டமன்றப் பேரவையானது, அந்த நேரத்தில் அமர்வில் இல்லாமல் இருந்ததால் மேற்கண்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பிப்பது தேவையானதாக இருந்தது. அதற்கிணங்கிய வகையில், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2021) 2021 டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று மாண்புமிகு ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அதே தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

8. இந்த சட்டமுன்வடிவானது கூறப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றி அமைக்க விழைகிறது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

**2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2021) பிறப்பிக்கப்பட்டதைத் தேவையானதாக்கிய சூழ்நிலைகளை விளக்குகின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 168 ஆம் விதியின்படியான விவர அறிக்கை.**

நீதிப்பேராணை மனு எண் 33984/2016–ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் 2016 அக்டோபர் திங்கள் 4 ஆம் தேதியிட்ட ஆணைக்கிணங்க பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தனி அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் கூறப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலமானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, இறுதியாக 2021 டிசம்பர் 31 ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

2. 2019 டிசம்பர் 11 ஆம் தேதியிட்ட நீதிப் பேராணை (உரிமையியல்) எண். 1443/2019-உடன் படிக்கப்பட்ட, 2019 டிசம்பர் 6 ஆம் தேதியிட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்கள் 5469–5467/2017–ல் இடைக்கால மனு எண்.182868/2019–இல் மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்துரர், இராணிபேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய புதிதாக மறுசீரமைக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிற்றொகுதிகளின் எல்லை மறுவரையறையானது, 2021 நவம்பர் 1, 2 மற்றும் 3–ஆம் தேதிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், எல்லை வரையறை ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில், கூறப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ஆதி திராவிடர்கள், பழங்குடியினர்கள் மற்றும் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களைச் சார்ந்த மகளிர் மற்றும் மகளிர் (பொது) ஆகியோரைச் சார்ந்த நபர்களுக்கான, இட ஒதுக்கீடானது, 2021 டிசம்பர் 7, 8 மற்றும் 9 ஆகிய தேதிகளில் அறிவிக்கப்பட்டுள்ளது.

3. மேலும், சட்டமன்றப் பேரவையில், 2021–2022 ஆம் ஆண்டிற்கான, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையின் போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சரின் அறிவிப்பின் அடிப்படையில், ஆறு நகராட்சிகள், அதாவது, கடலூர், காஞ்சிபுரம், சிவகாசி, கரூர், தாம்பரம் மற்றும் கும்பகோணம் ஆகிய நகராட்சிகள் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது மற்றும் 28 பேரூராட்சிகள் நகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டன. மேற்சொன்ன புதிதாக உருவாக்கப்பட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கான, சிற்றொகுதிகளின் எல்லை மறுவரையறை மற்றும் இட ஒதுக்கீடு செயல்முறைகளானவை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் பின்பு, கூறப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பதவிகளுக்கான இட ஒதுக்கீடானது அறிவிக்கப்பட வேண்டியுள்ளது.

4. மேலும், மாண்பமை இந்திய உச்சநீதிமன்றமானது, நீதிப்பேராணை மனு (உரிமையியல்) எண் 1443/2019–ல் பல்வகை மேல்முறையீடு எண். 1404/2021 மற்றும் பல்வகை மேல்முறையீடு எண் 2120/2021–ல் 27.09.2021 தேதியிட்ட அதன் ஆணையில் மாநிலத்தில் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களை நடத்த அதன் ஆணையின் தேதியில் இருந்து நான்கு மாத காலம் அவகாசம் வழங்கியது.

5. மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தின் கூறப்பட்ட ஆணைக்கிணங்கி, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையமானது, 17 மாநகராட்சிகள், 110 நகராட்சிகள் மற்றும் 489 பேரூராட்சிகளுக்கான சாதாரண தேர்தல் நடத்தும் நடைமுறைகளுக்கான விரைவான நடவடிக்கையை தொடங்கியது. தற்போதைய சட்டமன்றப் பேரவையின் வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தொகுதிவாரியான உள்ளாட்சி அமைப்பின் வாக்காளர் பட்டியல்களை தயாரித்தல், வாக்குச் சாவடிகளை அடையாளம் காணுதல், அனைத்து தொடர்புடைய அலுவலர்களுக்கு மின்னணு வாக்கு இயந்திரங்களைக் கையாளுவதற்கான பயிற்சியளித்தல், மின்னணு வாக்கு இயந்திரங்களின் முதல் நிலை பரிசோதனை செய்தல் போன்ற தேர்தலுக்கு முந்தைய நடவடிக்கைகள் கூறப்பட்ட ஆணையத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6. மேற்கண்ட சூழ்நிலைகளில், தனி அலுவலர்களின் பதவிக் காலமானது 2021 டிசம்பர் 31 ஆம் தேதியன்று முடிவடைவதன் காரணமாக, தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 2022 ஜூன் 30 வரையிலான மேலும் ஆறு மாத காலத்திற்கு அல்லது பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கான சாதாரண தேர்தல்களுக்கு பின்பு நடத்தப்படும் மன்றத்தின் முதல் கூட்டம் வரை, இதில் எது முந்தையதோ அது வரையில் நீட்டிப்பதற்காக பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்ய அரசானது முடிவு செய்தது.

7. மாநில சட்டமன்றப் பேரவையானது, அந்த நேரத்தில் அமர்வில் இல்லாமல் இருந்ததால் மேற்கண்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பிப்பது தேவையானதாக இருந்தது. அதற்கிணங்கிய வகையில், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டங்கள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2021) 2021 டிசம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று மாண்புமிகு ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அதே தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

**கே.என். நேரு,**
*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஜனவரி 7.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2022**

**1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம்) சட்டம் என்று வழங்கப் பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

34ஆம் பிரிவின் திருத்தம்.

2. 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவில், (1) ஆம் உட்பிரிவில், பின்வரும் வரம்புரை, (i) ஆம் கூறில் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“வரம்புரையாக, இந்தக் கூறில் அடங்கியுள்ள எதுவும், கண்பார்வை குன்றியிருக்கிற அல்லது உடல் ஊனத்தின் பொருட்டு எழுத முடியாமலிருக்கிற நபர் எவருக்கும் பொருந்துதல் ஆகாது.”.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 34ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (i)ஆம் கூறின்படி, தமிழ் அல்லது ஆங்கிலம் அல்லது இதன் பொருட்டு, குறிப்பிட்ட பகுதி எதனின் தொடர்பாக, அரசால் அறிவிக்கப்படலாகும் பிற மொழியினை எழுத மற்றும் படிக்கத் தெரியாத நபர் எவரும் பதிவு பெற்ற கூட்டுறவுச் சங்கம் எதனின் நிர்வாகக் குழுமத்தின் உறுப்பினராக தேர்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கு தகுதியுடையவராகார். இந்த வகைமுறையின் காரணமாக, 2013ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடைபெற்ற தேர்தலின் போது, கண்பார்வை குன்றியிருக்கிற நபர்களால் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்கள் தேர்தல் அலுவலர்களால் நிராகரிக்கப்பட்டன. ஆகையால், கண்பார்வை குன்றிய நபர்கள் மற்றும் உடல் ஊனம் என்பதன் பொருட்டு எழுத முடியாதவர்கள் ஆகியோரைப் பதிவுபெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் எதனிலும் நிர்வாகக் குழுமத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது நியமனம் செய்யப்படுவதற்கு தகுதியானவர்களாக்கும் பொருட்டு, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 30/1983ல் தகுந்த திருத்தம் செய்வதற்கு அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஜனவரி 7.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 11/2022**

**1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

அரசியலமைப்பில் 43B ஆம் உறுப்பு மற்றும் பகுதி – IXB ஆகியன உட்புகுத்தப்பட்டதன் மூலம் 2011 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (தொண்ணூற்றி ஏழாம் திருத்தச்) சட்டத்தினை, நாடாளுமன்றமானது இயற்றியது மற்றும் அது 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டது என்பதாலும்; மற்றும்

அரசியலமைப்பின் வகைமுறைகளின் வழியில் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 30/1983) கொண்டுவரும் பொருட்டு, 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/2013) மூலம் கூறப்பட்ட சட்டத்தின் குறித்த சில பிரிவுகளுக்கு திருத்தம் செய்யப்பட்டது என்பதாலும்;

மற்றும், 2011 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (தொண்ணூற்றி ஏழாவது திருத்தச்) சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட அரசியலமைப்பின் (IXB ஆம் பகுதியானது அரசியலமைப்பின் 368 (2) ஆம் உறுப்பின் வகையங்களின் கீழ் தேவைக்கேற்ப மாநில சட்டமன்றத்தினால் பெறப்படும் ஒப்புதலின்மையால் அரசியலமைப்பின் வரம்புமீறி செயல்பட்டதாக 2013 ஆம் ஆண்டில் மாண்பமை குஜராத் உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது என்பதாலும்;

மற்றும் இந்திய யூனியன் எதிர் ராஜேந்திர N ஷா மற்றும் ஒருவர் [2021(8) SCALE 332] எனும் வழக்கில், மாண்பமை உச்சநீதிமன்றமானது அரசியலமைப்பின் IX ஆம் பகுதியின் முழுவதையும் ரத்து செய்யும் அளவிற்கு தவிர மாண்பமை குஜராத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை உறுதி செய்தது மற்றும் அரசியலமைப்பின் IX–B ஆம் பகுதியானது பல மாநிலங்கள் மற்றும் இந்திய யூனியன் பிரதேசங்கள் ஆகிய இரண்டிற்குள்ளும் பல – மாநில கூட்டுறவுச் சங்கங்கள் பொறுத்த வரையில் மட்டுமே செயல்படும் என அறிவித்தது என்பதாலும்;

அரசானது 2011 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (தொண்ணூற்றி ஏழாவது திருத்தச்) சட்டத்தினை பின்பற்றி 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திற்கு செய்யப்பட்ட பல திருத்தங்கள், மாநிலத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் வளர்ச்சியை மட்டுமே தடுப்பதாக இந்த திருத்தங்கள் இருக்கும் காரணத்தினால் அதனை விட்டொழிக்க வேண்டியது அவசியமாகிறது என்பதாலும்;

எனவே, தற்போது அரசானது அந்த நோக்கத்திற்காக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 30/1983–ஐ திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டாம் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, மாநில அரசானது அறிவிக்கை மூலம் குறிக்கலாகும் அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983.

2 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2ஆம் பிரிவில்,––

(1) (5) ஆம் கூறில், "மாநில அளவிலான" என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படவேண்டும்;

(2) (18) ஆம் கூறுக்காக பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது,–

"(18) "அலுவலக நிர்வாகி" என்பது குழுவின் தலைவர் அல்லது துணைத்தலைவர் எனப் பொருள்படும்;"

13 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மை சட்டத்தின் 13 ஆம் பிரிவில் ,––

(1) (1) ஆம் உட்பிரிவில், (d) கூறில், (ii) ஆம் உட்கூறில், "ஆறு மாதங்கள்" என்ற சொற்றொடருக்காக "ஓராண்டு" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) (2) ஆம் உட்பிரிவில், (d) கூறில், (ii) ஆம் உட்கூறில், "ஆறு மாதங்கள்" என்ற சொற்றொடருக்காக "ஓராண்டு" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

20–A–ஆம் விட்டு விடப்படுதல்.

4. முதன்மை சட்டத்தின் 20–A ஆம் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

23 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மை சட்டத்தின் 23 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில், (h) மற்றும் (i) கூறுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

26 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மை சட்டத்தின் 26 ஆம் பிரிவில், (4) ஆம் உட்பிரிவுக்காக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"(4) இப்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அரசின் அல்லது பதிவாளரின் அல்லது வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பினால் நியமிக்கப்பட்டவர், அரசுப் பணியாளராக, அல்லது நேர்வுக்கேற்ப கடனுதவி அளிக்கும் வங்கி அல்லது பிற பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் நிர்வாகக்குழுவின் அல்லது (தமிழ் நாடு மாநில வேளாண் விற்பனைக் கழகம் போன்ற) பிற அமைப்புகளினால் அல்லது அந்த நிர்வாகக்குழுவின் பதவிவழி உறுப்பினரின் நியமனதாரராக இருப்பின், அவர் தேர்தலில் வாக்களிக்க உரிமையுடையவராக இருத்தல் கூடாது.".

27 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

7. முதன்மை சட்டத்தின் 27 ஆம் பிரிவில் "மற்றும் புத்தகங்கள், தகவல்களின் பயன்பாட்டினை கொண்டிருத்தல் வேண்டும் மற்றும்" என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

32 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மை சட்டத்தின் 32 ஆம் பிரிவில், (2) ஆம் உட்பிரிவில் "நிதி ஆண்டின் முடிவிலிருந்து ஆறுமாத கால அளவிற்குள் நடைபெறுதல் வேண்டும்", என்ற சொற்றொடருக்காக "ஒரு கூட்டுறவு ஆண்டில் நடத்தப்படுதல் வேண்டிய" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

33 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

9. முதன்மை சட்டத்தின் 33 ஆம் பிரிவில் ,––

(1) (1)–ஆம் உட்பிரிவில், (a) கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது :–

(b) (a)–கூறில் உள்ளடங்கிய எது எவ்வாறு இருப்பினும், விதிகள் அல்லது துணைவிதிகள் அவ்வாறு வழங்குமிடத்து, பதிவு பெற்ற சங்கத்தின் உறுப்பினர்களிடையேயிருந்து அல்லது அரசுப் பணியாளர்களிடையே யிருந்து அல்லது இவ்விருதரப்பினரிடையேயிருந்து தலைவர் மற்றும் துணைத் தலைவர் உள்ளடங்கலாக குழுவின் உறுப்பினர்கள் அனைவரையும் அல்லது எவரையும் அரசு அல்லது பதிவாளரானவர் நியமிக்கலாம்:

வரம்புரையாக, குழு உறுப்பினர்கள் அனைவரையும் நியமனஞ் செய்யப்பட்ட தேதியிலிருந்து நாளிலிருந்து மூன்றாண்டுகளுக்கு அதிகமாக நியமனம் எதுவும் செய்யப்படுதல் கூடாது.",–

(2) (3) ஆம் உட்பிரிவுக்காக பதிலாக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது :–

“ (3) நிர்வாகக் குழுவானது

(a) தலைமைச் சங்கத்தைப் பொருத்த நேர்வில், விதிகளில் அல்லது துணை விதிகளில் குறிப்பிடப்படலாகிறவாறு பதினொன்றிற்கும் குறையாத, ஆனால் இருபத்தொன்பதிற்கும் மேற்படாத உறுப்பினர்கள்;

(b) மத்தியச் சங்கத்தைப் பொருத்த நேர்வில், விதிகளில் அல்லது துணை விதிகளில் குறிப்பிடப்படலாகிறவாறு பதினொன்றிற்கும் குறையாத, மற்றும், இருபத்தேழுக்கு மேற்படாத உறுப்பினர்கள்; மற்றும்

(c) தொடக்க நிலைச்சங்கத்தைப் பொருத்த நேர்வில், விதிகளில், அல்லது துணை விதிகளில் குறிப்பிடப்படலாகிறவாறு, ஏழுக்கும் குறையாத ஆனால், பதினேழிற்கும் மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.”,

(3) (4) ஆம் உட்பிரிவுக்குப் பின்பு பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:––

(5) பதிவாளரானவர், ஆணையின் மூலம், நிர்வாகக்குழு ஒன்றின் கூட்டம் எதிலும் கலந்து கொள்ளவும் மற்றும் அந்த நிர்வாகக்குழு கூட்ட நடவடிக்கைகளில் பங்கெடுத்து கொள்ளவும் அவரின் கீழ் பணிபுரியும் அலுவலர் ஒருவர் அல்லது பலரை அனுப்பி வைக்கலாம், ஆனால், அத்தகைய அலுவலர் அல்லது அலுவலர்கள் அக்கூட்டத்தில் வாக்களிக்க உரிமை கொண்டிருத்தல் கூடாது.”;

(4) (7) ஆம் உட்பிரிவில் “மேலாண்மை இயக்குநர் அல்லது தலைமை நிர்வாக அலுவலர்” என்ற சொற்றொடர் வரும் மூன்று இடங்களிலும் “மேலாண்மை இயக்குநர்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(5) (8)ஆம் உட்பிரிவில்,–

(i) “செயல் இயக்குநர்”, என்ற சொற்றொடருக்காக “உறுப்பினர்” என்ற சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல்வேண்டும்;

(ii) “செயல் இயக்குநர்கள்”, என்ற சொற்றொடர் வரும் இரண்டு இடங்களிலும் “உறுப்பினர்கள்” என்ற சொல்லானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(6) (9) ஆம் உட்பிரிவுக்காக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(9) (2) ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட பதவிவழி உறுப்பினர் ஒவ்வொருவரும், மற்றும் (1) ஆம் உட்பிரிவின் (b) கூறின் கீழ் அல்லது (8) ஆம் உட்பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட சங்கமொன்றின் வாரியமொன்றிற்கு நியமனம் செய்யப்பட்ட அரசு ஊழியர்கள் ஒவ்வொருவரும் நேர்விற்கேற்ப இந்தச் சட்டவிதிகள் மற்றும் துணைவிதிகளுக்கு இணங்காமல் அல்லது அத்தகைய தலைமைச் சங்கத்தின் அல்லது பிற அத்தகைய பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் நலன்களுக்கு எதிராக இருந்தால் அத்தகைய தலைமைச் சங்கத்தின் அல்லது பிற பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் தீர்மானம் எதுவும் தலைமைச் சங்கம் என்கின்ற நேர்வில் அரசுக்கும் மற்றும் பிற பதிவு செய்யப்பட்ட சங்கம் என்கிற நேர்வில் பதிவாளருக்கும் சுட்டியனுப்பலாம்.”.

(7) (10)ஆம் உட்பிரிவில்,–

(i) (a)–கூறில், “ஐந்து ஆண்டுகள்”, என்ற சொற்றொடருக்காக “மூன்று ஆண்டுகள்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;

(ii) (a) கூறுக்குப்பின் பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது :–

(aa) 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்றும், அந்த தேதியன்று மூன்று ஆண்டுகள் காலத்தை நிறைவு செய்பவரான, இந்தச் சட்டத்தின் கீழ் அமைத்துருவாக்கப்பட்ட வாரியம் எதனின் உறுப்பினர் பதவியைக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நபரும், அன்று முதல் பதவி விலகுதல் வேண்டும் மற்றும் அந்த தேதிக்கு பின்பு மூன்று ஆண்டுகள் பதவிக் காலத்தை நிறைவு செய்யும் நபரானவர் அத்தகைய நிறைவு செய்யும் தேதியில் பதவி விலகுதல் வேண்டும்;

(8) (11) ஆம் உட்பிரிவுக்குப் பின்பு பின்வரும் உட்பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

"(12) இந்தச் சட்டத்தில் உள்ளடங்கிய எது எவ்வாறு இருப்பினும், பதிவு பெற்ற சங்கம் ஒன்றின் துணை விதிகள் அவ்வாறு வழங்குகிறவிடத்து, அத்தகைய சங்கத்தின் பொதுக்குழுவானது பதிவாளரின் ஏற்பிசைவுடன் அரசு ஊழியர் ஒருவராக அல்லது நிதி உதவி வங்கியின் பணியாளரொருவராக அல்லது அரசுக்கு சொந்தமானதாகவோ அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழே உள்ள கூட்டு நிறுவனம் எதனின் பணியாளரொருவராக இருக்கும் நிருவாகி ஒருவரிடம் ஒரே சமயத்தில் மூன்றாண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு சங்கத்தின் அலுவலர்களின் மேலாண்மையினை ஒப்படைக்கலாம். நிருவாகி, நிருவாகக்குழு அல்லது சங்க அலுவலர் எவரின் பணிகள் அனைத்தையும் அல்லது எதையும் செய்து வருவதற்கும் சங்க நலனில் தேவைப்படலாகும் அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கும், அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.";

(9) (13) ஆம் உட்பிரிவுக்காக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

"(13) நிருவாகக்குழுவின் சாதாரண கூட்டங்கள் ஒவ்வொரு மூன்று மாதங்களிலும் குறைந்தது ஒரு முறையாவது நடத்தப்படுதல் வேண்டும்,

அதற்கு மூன்று முழு நாட்களுக்கும் குறையாத அறிவிப்பு ஒன்று வழங்கப்படுதல் வேண்டும். மேலாண்மை இயக்குநரானவர் அத்தகைய நிருவாகக்குழுவின் தலைவர் அல்லது அவர் இல்லாவிடில், துணை தலைவருடன் கலந்தாலோசித்து அல்லது மேலாண்மை இயக்குநர் எவரும் இல்லாவிடத்து அத்தகைய நிர்வாகக்குழுவின் தலைவர், அத்தகைய நிர்வாகக்குழுவின் கூட்டத்தைக் கூட்டுதல் வேண்டும்.";

(10) (14) ஆம் உட்பிரிவில்,—

(a) இரண்டு இடங்களில் வரும் அல்லது தலைமை நிர்வாக அதிகாரி எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(b) இரண்டு இடங்களில் வரும் "அல்லது தலைமையாளர்" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(c) "அல்லது துணை - தலைமையாளர்" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும் ;

(11) (15) ஆம் உட்பிரிவில், "அல்லது தலைமை நிர்வாக அலுவலர்" மற்றும் "அல்லது தலைமையாளர்" எனும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(12) (15) ஆம் உட்பிரிவுக்குப் பின்பு பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் :——

"(16) இச்சட்டத்தில் உள்ளடங்கிய எது எவ்வாறிருப்பினும், அரசு அல்லது பதிவாளரின் அல்லது வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பின் நியமனதாரர், அவர் அரசுப் பணியாளராக, அல்லது பதிவு பெற்ற சங்கத்தின் நிருவாகக்குழு அல்லது நிதியுதவி வங்கியின் அல்லது பதிவு பெற்ற மற்றொரு சங்க நிர்வாகக்குழுவின் அல்லது (தமிழ்நாடு வேளாண்மை விற்பனைக் குழு போன்ற) பிற குழுவின் நியமனதாரர் அல்லது பதவி வழி நிருவாகக்குழுவின் உறுப்பினராக இருப்பின், அவர் அந்த நிருவாகக்குழுவின் உறுப்பினர் என்ற முறையில், பதிவு பெற்ற எந்தவொரு சங்கத்தின் தேர்தலில் போட்டியிட தகுதியுடையவராக இருத்தல் கூடாது.".

33—A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

10. முதன்மைச் சட்டத்தின் 33—A ஆம் பிரிவில்,

(1) (4) ஆம் உட்பிரிவில் "ஐந்து ஆண்டுகள்" என்ற சொற்றொடருக்காக "மூன்று ஆண்டுகள்" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (4) ஆம் உட்பிரிவில், வரம்புரைக்குப் பின்பு, பின்வரும் வரம்புரையானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

மேலும் வரம்புரையாக, 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டம் தொடங்கப்பட்ட தேதியன்று, தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்கள் தேர்தல் ஆணையர் பதவி வகிப்பவர், மூன்று ஆண்டுகள் காலத்தை நிறைவு செய்திருப்பாராயின், கூறப்பட்ட தேதியன்று பதவியிலிருந்து நீக்கப்படுதல் வேண்டும்;

11. முதன்மைச் சட்டத்தின் 48 ஆம் பிரிவில் ,—— 48 ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1) (2) ஆம் உட்பிரிவில் (a) கூறில் ''அத்தகைய பிடித்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்கள் கால அளவிற்குள்'' என்ற சொற்றொடருக்காக ''வகுத்துரைக்கப்படலாகும் கால அளவிற்குள்'', என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2) (8)ஆம் உட்பிரிவில் ''அத்தகைய பிடித்தம் செய்யப்பட்ட நாளிலிருந்து பதினான்கு நாட்கள் கால அளவிற்குள்'' என்ற சொற்றொடருக்காக ''வகுத்துரைக்கப்படலாகும் கால அளவிற்குள்'', என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

12. முதன்மைச் சட்டத்தின் 80—ஆம் பிரிவில்,—— 80 ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1) (1) ஆம் உட்பிரிவுக்காக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

''(1) பதிவான ஒவ்வொரு சங்கத்தின் கணக்குகளையும், ஒவ்வொரு கூட்டுறவு ஆண்டிலும், குறைந்தது ஒரு முறையாவது பதிவாளர் தணிக்கை செய்ய வேண்டும் அல்லது இதன்பொருட்டு எழுத்துப்பூர்வமான பொது அல்லது சிறப்பு ஆணை மூலம், அவரால் அதிகாரம் அளிக்கப்பெற்ற நபரொருவரால் தணிக்கை செய்விக்கப்படுதல் வேண்டும். அத்தணிக்கையின் முடிவை, பதிவாளர், சம்பந்தப்பட்ட பதிவுப்பெற்ற சங்கத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்.

(1A) ஒவ்வொரு கூட்டுறவு ஆண்டிற்கும் ஒரு முறை (1)—ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தணிக்கைக்கு ஏற்பாடு செய்யப்படுமிடத்தில்—

(i) கூட்டுறவு ஆண்டின் முடிவிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது பதிவாளர் மேற்கொண்டு அனுமதிக்கக் கூடிய காலத்திற்குள், கணக்குகளைத் தணிக்கை செய்து முடிப்பதற்கு தேவையான நிதி நிலை அறிக்கைகளை மற்றும் பிற விவரங்களை பதிவு பெற்ற சங்கமானது தயார் செய்தல் வேண்டும், எனினும் அத்தகைய நீட்டிக்கப்பட்ட கால அளவு அல்லது கால அளவுகள் மொத்தத்தில் ஆறு மாதத்திற்கு மேற்படக்கூடாது; மற்றும்

(ii) தொடர்புடைய பதிவு பெற்ற சங்கத்தின் கூட்டுறவு ஆண்டு முடிவிலிருந்து ஆறு மாதங்கள் கால அளவிற்குள் அல்லது பதிவாளரால் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்பட்ட காரணங்களால் மேற்கொண்டு அனுமதிக்கப்படலாகும் அத்தகைய அதிகமான காலம் அல்லது கால அளவுகளுக்குள், தணிக்கையானது செய்து முடிக்கப்படுதல் வேண்டும், எனினும் அத்தகைய நீட்டிக்கப்பட்ட கால அளவு அல்லது கால அளவுகள், ஆறு மாதத்திற்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

(2) (3) ஆம் உட்பிரிவில், ''பணியமர்த்தம் செய்யப்பட்ட அரசு தணிக்கையர் அல்லது தணிக்கை நிறுவனங்கள்'' என்ற சொற்றொடருக்காக ''பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப் பெற்ற நபர்'', என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;

(3) (4) ஆம் உட்பிரிவில், ''(1) ஆம் உட்பிரிவின்படி பணியமர்த்தப்பட்ட அரசு தணிக்கையர் அல்லது தணிக்கை நிறுவனங்களாக'' என்ற சொற்றொடருக்காக ''பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற நபராக'', என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;

(4) (9) ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்பட வேண்டும்

13. முதன்மை சட்டத்தின் 84—A ஆம் பிரிவு விட்டுவிடப்படுதல் வேண்டும். 84—A ஆம் பிரிவு விட்டுவிடப் படுதல்.

14. முதன்மை சட்டத்தின் 88ஆம் பிரிவில் ,—— 88 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவுக்காக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :—

(1) பதிவாளரானவர்,—

(i) பதிவுப்பெற்ற சங்கம் எதனின் நிர்வாகக்குழு முறையாக செயல்படவில்லை அல்லது இச்சட்டத்தின் அல்லது விதிகளின்படி. பதிவாளரால் வழங்கப்படும் ஆணை அல்லது கட்டளை, எதனுடனும் வேண்டுமென்றே கீழ்ப்படியவில்லை அல்லது வேண்டுமென்றே இணங்கி நடக்கவில்லை என்று அவர் கருதினால்;

(ii) தொடர்ந்து வரும் இரண்டு கூட்டுறவு ஆண்டுகளுக்கு, –

(a) நிதியுதவும் வங்கியைப் பொருத்த நேர்வில், நிதி உதவி வங்கியின் உறுப்பினர்களிடமிருந்து செலுத்த மொத்தக் கடன் தொகையில் அறுபது சதவீதத்திற்கு மேல் திருப்பிச் செலுத்தப்படாமலிருந்தால் அல்லது அத்தகைய நிதி உதவி வங்கியின் கடனைத் திருப்பிச் செலுத்தாத உறுப்பினர்களின் எண்ணிக்கை, அந்த வங்கியிடமிருந்து கடன் பெற்றுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அறுபது சதவீதத்திற்கு மேற்பட்டால்; மற்றும்

(b) பிற பதிவு பெற்ற சங்கங்களைப் பொருத்த நேர்வில், அச்சங்கத்திற்கு, அதன் உறுப்பினர்களிடமிருந்து வரவேண்டிய மொத்த கடன் தொகையில் எழுபது சதவீதத்திற்கும் மேல் செலுத்தப்படாமலிருந்தால் அல்லது அத்தகைய பதிவுப்பெற்ற சங்கத்தின் கடனைத் திருப்பிச் செலுத்தாத உறுப்பினர்களின் எண்ணிக்கை அச்சங்கங்கத்திடமிருந்து கடன் பெற்றுள்ள மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் எழுபது சதவீதத்திற்கு மேற்பட்டிருந்தால், நேர்வுக்கேற்ப பதிவு பெற்ற சங்கத்தின் நிர்வாகக்குழுவுக்கோ அல்லது நிதி உதவி வங்கிக்கோ, அதன் முறையீடுகளைச் செய்வதற்கான வாய்ப்பு ஒன்றினை அளித்த பின்பு,

எழுத்தாலான ஆணையின் மூலமாக, அதன் நிர்வாகக்குழுவை கலைத்து மற்றும் அரசு ஊழியர் ஒருவரை அல்லது அரசுக்குச் சொந்தமான, அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கூட்டுநிறுவனம் எதனின் (இதன் பின்பு இதில் தனி அலுவலர் என்று குறிப்பிடப்படும்) பணியாளர் ஒருவரை ஓராண்டுக்கும் மேற்படாத குறித்துரைக்கப்பட்டதொரு கால அளவுக்கு, அச்சங்கத்தின் அலுவல்களை மேலாண்மை செய்து வருவதற்கு பணியமர்த்துதல் வேண்டும்.

வரம்புரையாக, நிருவாகக்குழு கலைப்பின் அறிவிக்கை வழங்கப்பட்ட தேதியிலிருந்து, மூன்று மாத காலஅளவுக்குள் அல்லது அடுத்த உயர் அலுவலர், மேற்கொண்டும் அனுமதிக்கலாகும் அத்தகைய கால அளவு அல்லது கால அளவுகளுக்குள், இந்த உட்பிரிவின் கீழ் ஆணை பிறப்பித்தல் வேண்டும்; ஆனால் அவ்வாறு நீட்டிக்கப்பட்ட கால அளவு அல்லது கால அளவுகள், மொத்தத்தில் ஆறு மாதங்களுக்கு மிகாதிருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக, செலுத்தப்படாமல் எஞ்சியுள்ள மொத்த நிலுவைத் தொகையை (ii) இனத்தின் நோக்கத்திற்காக கணக்கிடுகையில், பாதகமான பருவகால நிலையினால் அல்லது பிற காரணம் எதனாலும், தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட தள்ளுபடி செய்யப்பட்ட அல்லது தற்காலிகமாகத் தள்ளி வைக்கப்பட்ட அல்லது தடை ஆணையின் காரணத்தினால் எந்த தவணைத் தொகை அல்லது தொகை எதையும், அந்தத் தவணைத் தொகையை அல்லது தொகையை பொறுத்த வரையில் நீக்கிவிட வேண்டும்:

மேலும் வரம்புரையாக, (ii) – இனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை செலுத்தத் தவறிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதில், பாதகமான பருவ நிலையின் அல்லது பிற காரணத்தினால் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு வழங்கிய தள்ளுபடி அல்லது தற்காலிகமாகத் தள்ளி வைத்தல் அல்லது பிறப்பித்த தடை ஆணையின் மூலம் தவணைத் தொகை அல்லது தொகையை செலுத்தத்தக்க பொறுப்பில்லாத உறுப்பினர் எவரும், அந்த தவணைத் தொகையை அல்லது தொகையைப் பொருத்த வரையில், நீக்கப்படவேண்டும்.

“(1A) 1 ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணையில், குறிப்பிடப்பட்டுள்ள கால அளவு பதிவாளரின் விருப்பப்படி அவ்வப்போது நீட்டிக்கப்படலாம், வரம்புரையாக மொத்தத்தில் இரண்டு ஆண்டுகளுக்கு மேல் நடைமுறையில் இருத்தல் கூடாது.”.

(2) (2) ஆம் உட்பிரிவில்

(a) “செயலாட்சியர் ஒருவர்” என்ற சொற்றொடருக்காக “தனி அலுவலர் ஒருவர்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) “செயலாட்சியர்” என்ற சொற்றொடருக்காக “தனி அலுவலர்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(3) (3) ஆம் உட்பிரிவில் “செயலாட்சியர்” என்ற சொற்றொடருக்காக “தனி அலுவலர்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(4) (4) ஆம் உட்பிரிவில் “செயலாட்சியர்” என்ற சொற்றொடருக்காக “தனி அலுவலருக்கு” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்;

(5) (5)–ஆம் உட்பிரிவில் ''செயலாட்சியர்'' என்ற சொற்றொடருக்காக ''தனி அலுவலர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;

(6) (8)–ஆம் உட்பிரிவில் ''செயலாட்சியர்'' என்ற சொற்றொடருக்காக ''தனி அலுவலர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;

89 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

15. முதன்மைச் சட்டத்தின் 89 ஆம் பிரிவில் ,––

(1) ஓரத் தலைப்பில் ''செயலாட்சியர்'' என்ற சொற்றொடருக்காக ''தனி அலுவலர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;

(2) (1)ஆம் உட்பிரிவுக்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :–

''(1) (i) பதிவு செய்யப்பட்ட சங்கம் எதனின் நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் முடிவடைந்து, இச்சட்டம், விதிகள் மற்றும் துணை விதிகள் ஆகியவற்றின் வகைமுறைகளுக்கிணங்க, புதிய நிர்வாகக்குழு அமைக்கப்படமுடியாத விடத்து, அல்லது.

(ii) அமைக்கப்பட்ட புதிய நிர்வாகக்குழு, முந்தைய நிர்வாகக்குழுவின் பதவிக் காலம் முடிவடைவதன் பேரில் பதவியேற்கத் தவறினால் அல்லது பதவியேற்றுக் கொள்வதிலிருந்து தடுக்கப்பட்டால்; அல்லது

(iii) தற்போதைய நிர்வாகக்குழு, மொத்தமாக பதவியிலிருந்து ராஜினாமா செய்திருந்தால்; அல்லது

(iv) (a) எந்த ஒரு காரணத்தை முன்னிட்டும் காலியிடம் ஏற்பட்டிருப்பின்; அல்லது

(b) நிர்வாகக்குழுவின் ஒரு அல்லது அதிகளவு உறுப்பினர்கள் ராஜினமா செய்திருந்தால், மற்றும், மீதமுள்ள உறுப்பினர்கள், நிர்வாகக்குழு கூட்டத்திற்கான குறைவெண் வரம்பு பெற முடியாதபோது,

பதிவாளர், தாமாக முற்பட்டோ, அல்லது பதிவு பெற்ற சங்க உறுப்பினர் எவரின் விண்ணப்பத்தின் பேரிலுமோ, மற்றும் பதவி ஏற்கத் தவறியுள்ள அல்லது பதவி ஏற்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ள புதிய நிர்வாகக்குழு ஒன்றைப் பொருத்த நேர்வில், மேற்சொன்ன நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு தங்களது முறையீடுகளை செய்து கொள்வதற்கான வாய்ப்பினைக் வழங்கிய பின்னர், ஆணையின் மூலமாக, அரசு ஊழியர் ஒருவரை, அல்லது அரசுக்குச் சொந்தமான தாகவோ, அதன் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள கூட்டு நிறுவனம் எதனின் பணியாளர் ஒருவரை, (இதன் பின்பு இதில் தனி அலுவலர் எனக் குறிப்பிடப்படும்), புதிய நிர்வாகக்குழு ஒன்று அமைக்கப் படுகின்றவரையில் அல்லது நேர்விற்கேற்ப புதிய நிர்வாகக்குழு பதவி ஏற்கின்ற வரையில் அப்பதிவு பெற்ற சங்கத்தின் அலுவல்களை மேலாண்மை செய்து வருவதற்கு, ஆறு மாதங்களுக்கு மேற்படாத குறித்துரைக்கப்பட்ட கால அளவுக்கு பணியமர்த்தலாம்:

''வரம்புரையாக, பதிவாளரால் எழுத்துப்பூர்வமாக பதிவு செய்யப்படும் காரணங்களுக்காக, அந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட கால அளவு சிறப்புக் காரணங்களுக்காக அவ்வப்போது நீட்டிக்கப்படலாம், ஆனால் அத்தகைய நீட்டிக்கப்பட்ட கால அளவானது மொத்தத்தில் அவ்வாணை, ஓராண்டுக்கும் மேலாக இருத்தல் கூடாது:

(3) (2)–ஆம் உட்பிரிவில், இரு இடங்களில் ''செயலாட்சியர்'' என்ற சொற்றொடருக்காக ''தனி அலுவலர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**16.** முதன்மைச் சட்டத்தின் 89 ஆம் பிரிவிற்கு பிறகு, பின்வரும் பிரிவானது உட்புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

“89–A. குறிப்பிட்ட சில நேர்வுகளில் நேரத்தை விலக்குதல்.–

80 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (e)-ஆம் கூறில், 81ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், 82 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், 87 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான இரண்டாம் வகைமுறையில், 88 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவிற்கான முதலாம் வகைமுறையில் அல்லது 89 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், குறிப்பிடப்பட்டுள்ள காலத்தை கணக்கிடுவதில், நீதிமன்றம் எதனின் ஆணை ஒன்றினால் தடை ஆணை அல்லது உறுத்துக் கட்டளை எவற்றின் காரணமாக நிறுத்தப்பட்ட நடவடிக்கை எதனின் கால அளவு அல்லது கால அளவுகள் விலக்கப்படுதல் வேண்டும்.

17. முதன்மைச் சட்டத்தின் 91வது பிரிவில் (iii)–வது இனத்தில் “ஒரு ஆண்டு” என்ற சொற்றொடருக்காக “ஐந்து ஆண்டுகளுக்கு” என்ற சொற்றொடரானது மாற்றாக வைக்கப்படுதல் வேண்டும். 91 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

161 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

18. முதன்மைச் சட்டத்தின் 161 ஆம் பிரிவில்,––

(1) (1) ஆம் பிரிவுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :––

“(1) இச்சட்டம், விதிகள் அல்லது பதிவான சங்கத்தின் துணை விதிகளின் வகைமுறைகளுடன் ஒவ்வாத முறையில் எந்தவொரு சங்கத்தின் நிதிகள் அல்லாத பிற சொத்துக்களைப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்த அனுமதிக்கும் பதிவு பெற்ற சங்க அலுவலர் அல்லது பணியாளர் அல்லது சம்பளம் பெறும் பணியாளர் அல்லது சங்க உறுப்பினர் ஒரு வருட காலம் நீடிக்கலாகும் சிறை தண்டனை அல்லது ரூபாய் பத்தாயிரம் வரை நீடிக்கத்தக்க அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கத்தக்கவராவார்.”.

165 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(2) (2) ஆம் உட்பிரிவில் “செயலாட்சியர்“என்ற சொற்றொடருக்காக “தனி அலுவலர்“ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

19. முதன்மைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவில்,

(1) “செயலாட்சியர் ஒருவர்” என்ற சொற்றொடருக்காக “தனி அலுவலர்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) மூன்று இடங்களில் “செயலாட்சியர் ஒருவர்” என்ற சொற்றொடருக்காக “தனி அலுவலர் ஒருவர்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

169 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

20. முதன்மைச் சட்டத்தின் 169 ஆம் பிரிவில், “33 ஆம் பிரிவில் (8) ஆம் உட்பிரிவில்” என்ற சொற்றொடருக்காக “33 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில் (b) கூறில் அல்லது (8) ஆம் உட்பிரிவில்” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

170 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

21. முதன்மைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவில், (a) ஆம் கூறில், “88 ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில்” என்ற சொற்றொடருக்காக, “88 ஆம் பிரிவில் (1A) ஆம் உட்பிரிவில்” “என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

2011 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (தொண்ணூற்றி ஏழாம் திருத்தச்) சட்டத்தின் மூலம் அரசியலமைப்பில் 43 – B ஆம் உறுப்பு மற்றும் IX – B ஆம் பகுதி உட்புகுத்தப்பட்டது மற்றும் 2012 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்தது. 2011 ஆம் ஆண்டு அரசியலமைப்பு (தொண்ணூற்றி ஏழாம் திருத்தச்) சட்டத்தினால் மற்றும் தமிழ்நாடு சட்டம் 4/2013–ஆல் திருத்தம் செய்யப்பட்டதான அரசியலமைப்பின் வகைமுறைகளின் வழியில் 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 30/1983) திருத்தம் செய்யப்பட்டது. இந்திய யூனியன் எதிர் ராஜேந்திர N ஷா மற்றும் ஒருவர் [2021(8) SCALE 332] வழக்கில் மாண்பமை உச்சநீதிமன்றமானது நீதிப்பேராணை மனு எண் (பொதுநல வழக்கு) எண் 166/2012–இல் 2013 ஏப்ரல் 22 தேதியிட்ட குஜராத் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினை உறுதி செய்து, கூட்டுறவுச் சங்கங்கள் பொறுத்த வரையில், கூறப்பட்ட IX – B பகுதியை இந்திய அரசியலமைப்பின் வரம்பிற்கு மீறியதாக அறிவித்துள்ளது.

2. பொதுமக்களிடமிருந்தும் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களிடமிருந்தும் கூட்டுறவுச் சங்கங்களில் நிதிமுறைகேடுகள் மற்றும் மோசடிகள் தொடர்பாக பல புகார்கள் வரப்பெற்றுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டதில் அதிக அளவிலான நிதிமுறைகேடுகளும், போலி நகைகள் மீதான கடன்கள் மற்றும் கோடிக்கணக்கில் போலிக்கடன்கள் வழங்கப்பட்டுள்ளது போன்றவை வெளிக்கொணரப்பட்டுள்ளன.

3. எனவே, கூட்டுறவுச் சங்கங்களின் நலனைப் பாதுகாக்கும் நோக்கில், அவற்றின் நிருவாகங்களை நெறிப்படுத்தவும், முறையான ஆளுகையை உறுதி செய்யவும், கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளின் திறனை அதிகரிக்கவும், சங்கங்களின் இயக்குநர்களின் குழுவின் பதவிக் காலத்தை ஐந்து ஆண்டுகளிலிருந்து மூன்று ஆண்டுகளாக குறைக்க மற்றும் ஒரு சட்டத்தினை மேற்கொள்வதன் மூலம், அரசியலமைப்பின் IX - B பகுதியின் வகைமுறைகளுடன் இசைந்து செய்யப்பட்ட திருத்தங்களுக்கு முந்தைய 1983 ஆம் ஆண்டு கூறப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் இருக்கும் சில வகைமுறைகளை மீட்டெடுக்கவும் அரசானது முடிவு செய்துள்ளது.

4. இச்சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**இ. பெரியசாமி,**
*கூட்டுறவுத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஜனவரி 7.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2022**

**1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

33 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 33 ஆம் பிரிவில், (1)ஆம் உட்பிரிவில் உள்ள வரம்புரையில் ''பத்து ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பதினொரு ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2021.

3. (1) 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

நீக்கறவு மற்றும் காப்புரை.

(2) அத்தகைய நீக்கறவு எவ்வாறிருப்பினும் கூறப்பட்ட அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாக கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/ 1989) 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவானது, ஒரு புதிய சந்தைக்குழு அமைக்கப்படுவது நிலுவையில் இருக்கும்போது, சந்தைக்குழு எதனின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு மொத்தத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு தனி அலுவலர் ஒருவரை பணியமர்த்தம் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கூறப்பட்ட வகைமுறையின் விளைவாக, மாநிலத்தில் சந்தைக் குழுக்களின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு பணியமர்த்தப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலமானவை, அவ்வப்போது, கூறப்பட்ட இந்தச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் வகைமுறையை திருத்தம் செய்வதன் மூலம் கூறப்பட்ட மூன்று ஆண்டுகள் காலத்திற்கு அப்பால் நீட்டிக்கப்பட்டது. இறுதியாக, தமிழ்நாடு சட்டம் 31/2021–ன் மூலம் அவர்களுடைய பதவிக் காலமானது பத்து ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்பட்டது கூறப்பட்ட காலமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் தேதியன்று நிறைவடைந்தது.

2. 26 சந்தைக் குழுக்களில், திருச்சிராப்பள்ளி மற்றும் கடலூர் சந்தைக் குழுக்களைத் தவிர 24 சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். கூறப்பட்ட 24 சந்தைக் குழுக்களில், (தேனி சந்தைக் குழு நீங்கலாக) 23 சந்தைக் குழுக்களுக்கு தலைவர் மற்றும் துணைத்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் கூறப்பட்ட 23 சந்தைக் குழுக்களில் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

3. எனவே, (திருச்சிராப்பள்ளி, கடலூர், தேனிசந்தைக் குழுக்கள் நீங்கலாக) 23 சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலமானது 30.11.2020–லிருந்து, தொடர்புடைய சந்தைக் குழுக்களின் பொறுப்பினை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முந்தைய தேதி வரை நீட்டிக்கப்பட்டது. மேலும் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலமானது 30.11.2020–லிருந்து 29.11.2021 வரையில் நீட்டிக்கப்பட்டது.

4. இதற்கிடையே, 2021 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23 ஆம் நாளன்று கூறப்பட்ட 24 சந்தைக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் திரும்பப் பெறப்பட்டனர் மற்றும் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி சந்தைக் குழுக்கள் நீங்கலாக 23 சந்தைக் குழுக்களுக்கு, தனி அலுவலர்கள் ஓர் ஆண்டுக் கால அளவிற்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

5. திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி ஆகிய சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் நீட்டிக்கப்பட்ட பதவிக் காலமானது 29.11.2021 அன்றுடன் நிறைவடைந்தது மற்றும் கூறப்பட்ட சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு மேலும் சிறிது காலம் ஆகும் என்பதாலும், கூறப்பட்ட 3 சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 29.11.2021—க்கு அப்பால் மேலும், ஓர் ஆண்டுக் காலத்திற்கு அல்லது கூறப்பட்ட சந்தைக் குழுக்களின் மறு அமைத்துருவாக்கம் செய்கின்ற வரையில் இவற்றில் எது முந்தையதோ அதுவரையில் நீட்டிக்க வேண்டியது ஒரு கட்டாயத் தேவையாக இருந்தது. எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம்27/1989–ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்தது.

6. மேற்கண்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2021), 2021 நவம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று மாண்புமிகு ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2021 நவம்பர் 27 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

7. இந்தச் சட்டமுன்வடிவானது கூறப்பட்ட அவசரச் சட்டத்தை மாற்றி அமைக்க விழைகிறது.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,**
*வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்.*

**2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2021) பிறப்பிக்கப்பட்டதைத் தேவையானதாக்கிய சூழ்நிலைகளை விளக்குகின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 168 ஆம் விதியின்படியான விவர அறிக்கை.**

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1989) 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவானது, ஒரு புதிய சந்தைக்குழு அமைக்கப்படுவது நிலுவையில் இருக்கும்போது, சந்தைக்குழு எதனின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு மொத்தத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு தனி அலுவலர் ஒருவரை பணியமர்த்தம் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கூறப்பட்ட வகைமுறையின் விளைவாக, மாநிலத்தில் சந்தைக் குழுக்களின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு பணியமர்த்தப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலமானவை, அவ்வப்போது, கூறப்பட்ட இந்தச் சட்டத்தின் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் வகைமுறையை திருத்தம் செய்வதன் மூலம் கூறப்பட்ட மூன்று ஆண்டுகள் காலத்திற்கு அப்பால் நீட்டிக்கப்பட்டது. இறுதியாக, தமிழ்நாடு சட்டம் 31/2021–ன் மூலம் அவர்களுடைய பதவிக் காலமானது பத்து ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்பட்டது. கூறப்பட்ட காலமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் தேதியன்று நிறைவடைந்தது.

2. 26 சந்தைக் குழுக்களில், திருச்சிராப்பள்ளி மற்றும் கடலூர் சந்தைக் குழுக்களைத் தவிர 24 சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். கூறப்பட்ட 24 சந்தைக்குழுக்களில், (தேனி சந்தைக் குழு நீங்கலாக) 23 சந்தைக் குழுக்களுக்கு தலைவர் மற்றும் துணைத்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் கூறப்பட்ட 23 சந்தைக் குழுக்களில் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

3. எனவே, (திருச்சிராப்பள்ளி, கடலூர், தேனி சந்தைக் குழுக்கள் நீங்கலாக) 23 சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலமானது 30.11.2020—லிருந்து, தொடர்புடைய சந்தைக் குழுக்களின் பொறுப்பினை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முந்தைய தேதி வரை நீட்டிக்கப்பட்டது. மேலும் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி சந்தைக் குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக் காலமானது 30.11.2020 லிருந்து 29.11.2021 வரையில் நீட்டிக்கப்பட்டது.

4. இதற்கிடையே, 2021 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23 ஆம் நாளன்று கூறப்பட்ட 24 சந்தைக் குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் திரும்பப் பெறப்பட்டனர் மற்றும் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி சந்தைக் குழுக்கள் நீங்கலாக 23 சந்தைக் குழுக்களுக்கு, தனி அலுவலர்கள் ஓர் ஆண்டுக் கால அளவிற்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

5. திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி ஆகிய சந்தைக்க குழுக்களின் தனி அலுவலர்களின் நீட்டிக்கப்பட்ட பதவிக் காலமானது 29.11.2021 அன்றுடன் நிறைவடைந்தது மற்றும் கூறப்பட்ட சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு மேலும் சிறிது காலம் ஆகும் என்பதாலும், கூறப்பட்ட 3 சந்தைக்குழுக்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 29.11.2021—க்கு அப்பால் மேலும், ஓர் ஆண்டுக் காலத்திற்கு அல்லது கூறப்பட்ட சந்தைக் குழுக்களின் மறு அமைத்துருவாக்கம் செய்கின்ற வரையில் இவற்றில் எது முந்தையதோ அதுவரையில் நீட்டிக்க வேண்டியது ஒரு கட்டாயத் தேவையாக இருந்தது. எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 27/ 1989 ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்தது.

6. மாநிலச் சட்டமன்றப் பேரவையானது, அந்த நேரத்தில் அமர்வில் இல்லாமல் இருந்ததால் மேற்கண்ட முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்கு அவசரச் சட்டம் ஒன்றை பிறப்பிப்பது தேவையானதாக இருந்தது. அதற்கிணங்கிய வகையில், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2021), 2021 நவம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று மாண்புமிகு ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2021 நவம்பர் 27— ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

**எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்,**
*வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஜனவரி 7.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130 ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2022**

**2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்திய குடியரசின் எழுபத்து இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 9/2012

28 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தின், 28 ஆம் பிரிவில், "வகை – I – பதவி வழி உறுப்பினர்கள்" எனும் தலைப்பின் கீழ், (e) ஆம் கூறுக்கு பின், பின்வரும் கூறானது, சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(f) இயக்குநர், தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பயிற்சிக் கழகம், சென்னை. ".

**நோக்கக் காரண விளக்கவுரை.**

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதியரசர் / தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் அவர்களின் ஆலோசனையின் அடிப்படையில், தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகத்தின் செயலாட்சி மன்றமானது, 14.08.2021 அன்று நடைபெற்ற அதன் 39–வது கூட்டத்தில் தமிழ்நாடு மாநில நீதித்துறைப் பயிற்சிக் கழகத்தின் இயக்குநரை பல்கலைக்கழகத்தின் கல்வி மன்றத்தின் பதவிவழி உறுப்பினராக்க முடிவு செய்து, தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. மேற்சொன்ன தீர்மானத்திற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, பல்கலைக்கழகத்தின் பதிவாளர், 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக்கழகச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 9/2012) தக்கவாறு திருத்தம் செய்ய அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. அரசானது, கவனமான பரிசீலனைக்குப் பின்பு, மேற்சொன்ன முன்மொழிவை ஏற்று, அந்த நோக்கத்திற்காக தமிழ்நாடு சட்டம் 9/2012–ஐ திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எஸ். ரகுபதி,**
*சட்டத்துறை அமைச்சர்.*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஜனவரி 7.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2022–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்கக் காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2022**

**அரசுக்கு சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள், மாநில கழகங்கள், சட்டப்பூர்வ வாரியங்கள் மற்றும் அதிகார அமைப்புகளில் குறித்த சில பதவிகளைப் பொறுத்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் ஆணையத்திற்கு கூடுதல் செயற்பணிகளை ஒப்படைப்பு செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தி இரண்டாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. (1) இந்தச் சட்டம், 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய (கூடுதல் செயற்பணிகள்) சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும். பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தின், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) ''ஆணையம்'' என்பது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் என்று பொருள்படும்;

(b) ''அரசு'' என்பது மாநில அரசு என்று பொருள்படும்;

(c) ''அமைப்பு'' என்பது அரசின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனம், அரசுக் கழகங்கள் அல்லது சட்டப்பூர்வ வாரியம் அல்லது அதிகார அமைப்பு என்று பொருள்படும்;

(d) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(e) ''காத்திருப்புப் பட்டியல்'' என்பது தேர்வு பட்டியலில் பொதுப் பிரிவினர் உள்ளடங்கலாக ஒவ்வொரு இடஒதுக்கீட்டுப் பிரிவின் விண்ணப்பதாரர்களின் இருபத்தைந்து விழுக்காட்டிற்கும் குறையாத விண்ணப்பதாரர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு பட்டியல் என்று பொருள்படும்;

(f) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்.

3. தற்போது நடைமுறையிலுள்ள மாநிலச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், எந்தவொரு அமைப்பும், பணியமர்த்துவதற்காக, விண்ணப்பத்தாரர்களை தேர்ந்தெடுப்பதற்கு வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் ஆணையத்தைக் கோரலாம். ஆள்சேர்ப்புக்கான கோரிக்கை

தமிழ்நாடு சட்டம் 14/2016. வரம்புரையாக, 2016 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தில் ஓட்டுநர் பதவி மற்றும் D–பிரிவாக வகைப்படுத்தப்பட்ட பதவிகள் தொடர்பாக அத்தகைய கோரிக்கையானது இருத்தல் கூடாது.

தமிழ்நாடு சட்டம் 14/2016. 4. (1) ஆணையமானது, அவ்வப்போது 3 ஆம் பிரிவின் கீழ் பெறப்பட்ட கோரிக்கைகளை ஒருங்கிணைத்து ஓர் ஆண்டிற்கு இரண்டு முறை ஆட்சேர்ப்புகளை நடத்தி, விண்ணப்பத்தாரர்களை தேர்ந்தெடுத்து, மற்றும் 2016 ஆம் ஆண்டு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டத்தின் 27ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணி அமர்த்தியதற்கான இடஒதுக்கீட்டு கொள்கையை பின்பற்றி ஒவ்வொரு பதவிக்கான காத்திருப்புப் பட்டியல் ஒன்றினையும் தேர்வுப் பட்டியல் ஒன்றினையும் தயார் செய்து தொடர்புடைய அமைப்புகளுக்கு தேர்வு பட்டியலை மேலனுப்புதல் வேண்டும். ஆணையத்தின் மூலம் ஆள் சேர்ப்பு

வரம்புரையாக, ஆணையமானது அமைப்பு எவற்றிலுமிருந்து சிறப்பு சூழ்நிலைகளின்படியான கோரிக்கையின் பேரில் எந்த நேரத்திலும் ஆட்சேர்ப்பு நடத்தலாம்.

(2) காத்திருப்புப் பட்டியலானது, தேர்வுப் பட்டியலினை மேலே அனுப்பிய நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்குள் அல்லது அதைத்தொடர்ந்து தேர்வுப் பட்டியல் வரையப்படும் வரை, இவற்றில் எது முந்தையதோ, அதுவரையில் நடைமுறையில் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்களுக்கான பணியமர்த்தம்

5. (1) தேர்வுப் பட்டியலினை பெற்றுக்கொண்டதன் பேரில், அமைப்பானது தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்குப் பணியமர்த்த ஆணைகளை வழங்குதல் வேண்டும்.

(2) தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதார் எவரேனும் பணியமர்த்த ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலத்திற்குள், அமைப்பில் பணியில் சேர தவறினால், அவர் பணி அமர்த்தியதற்கான உரிமையை இழத்தல் வேண்டும்.

வரம்புரையாக, அமைப்பானது, சிறப்பான சூழ்நிலைகளில், பணியில் சேர்வதற்கு மூன்று மாதங்களுக்கு மிகாத மேலுமொரு கால அவகாசத்தை வழங்கலாம்.

(3) கூறப்பட்ட காலத்திற்குள் விண்ணப்பதாரர் பணியில் சேர தவறுவதன் பேரில் அமைப்பானது, பணியமர்த்தத்திற்காக காத்திருப்புப் பட்டியலிலிருந்து ஒரு விண்ணப்பதாரரை அனுப்புவதற்கு ஆணையத்திடம் கோரலாம்.

இடர்ப்பாடுகைள நீக்குவதற்கான அதிகாரம்

6. இந்தச் சட்டத்தின் வகை முறைகளை சொற்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, தமிழ்நாடு அரசிதழில் ஆணை ஒன்றை வெளியிடுவதன் மூலம் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்கு தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தனக்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம்.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்

7. (1) வரம்பரையாக அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்த இரண்டு ஆண்டுகளைக் கொண்ட காலஅளவு ஒன்று முடிவடைந்ததற்கு பின்னர் செய்யப்படுதல் கூடாது.

7. (2) இந்த அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(a). இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடுதல் வேண்டும் மற்றும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டால் அன்றி அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளான்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(b). இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும் என வெளிப்படையாக தெரிவிக்கப்பட்டாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளன்றே நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3). இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும் அது செயப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்துவரும் கூட்டத் தொடரோ முடிவடைவதற்கு முன்பு இப்பேரவை அத்தகைய விதி, அறிவிக்கை அல்லது ஆணை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமாயின் அல்லது அப்பேரவை அந்த விதி, ஆணை செய்யப்படுத்துதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமாயின் அவ்விதி அல்லது அந்த அறிவிக்கை அல்லது அவ்வாணை அதற்கு பின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதலோ, நீக்கமோ அந்த விதி, அறிவிக்கை அல்லது ஆணையின்படி முன்னர் செய்யப்பட்ட எதனின் செல்லும் தன்மைக்கும் குந்தகம் இன்றி இருத்தல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள், அரசுக் கழகங்கள் மற்றும் சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அதிகார அமைப்புகளிலுள்ள பணியிடங்களுக்கு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமான ஆட்சேர்க்கையானது விண்ணப்பதாரர்களின் தேர்வு முறையில் ஒத்தத் தன்மையை கொண்டு வரும் மற்றும் அத்தகைய பணிகளுக்கு, மாநிலத்தின் கிராமப்புறங்களில் மற்றும் ஒதுக்குப்புறங்களில் உள்ள இளைஞர்களும் விண்ணப்பிப்பதை இயலச் செய்கிறது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் அத்தகைய ஆட்சேர்ப்பினை ஒப்படைப்பதின் மூலம் அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள், அரசுக் கழகங்கள் மற்றும் சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அதிகார அமைப்புகளில் எழும் காலியிடங்களுக்கான ஆட்சேர்ப்பில் நிபுணத்துவத்தை பேண முடியும் மற்றும் இது, மேலும் அத்தகைய நிறுவனங்களின் ஆட்சேர்ப்பு தொடர்பான, இக்கட்டான வேலைகளிலிருந்து விடுவித்து அவர்களின் அடிப்படை வேலைகளில் கவனம் செலுத்த அதிக நேரம் வழங்குகிறது.

2. எனவே, அரசுக்குச் சொந்தமான பொதுத்துறை நிறுவனங்கள், அரசுக் கழகங்கள் மற்றும் சட்டப்பூர்வமான வாரியங்கள் மற்றும் மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் அதிகார அமைப்புகளின் பணியிடங்களுக்கான ஆட்சேர்க்கை தொடர்பான கூடுதல் பணிகளை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 321 ஆம் உறுப்பில் வழங்கியவாறு ஒரு சட்டத்தினை மேற்கொள்வதன் மூலம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடம் ஒப்படைக்க, அரசானது, முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**முனைவர். பழனிவேல் தியாக ராஜன்,**
*நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்*

தலைமைச் செயலகம்,
சென்னை,
2022 ஜனவரி 7.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*